**தலைப்பு 117 - நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தியிலும் 2 ஆம் பந்தியிலும் அமைச்சு தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி தொடக்கம் தலைப்புக்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 செப்தெம்பர் 07 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச்

சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதிஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சிற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்தத் தேறிய நிதி ரூபா 144,265 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டினது முடிவளவில் அதில் ரூபா 133,304 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 10,961 மில்லியன் எஞ்சியிருந்தது. அது வழங்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டின் 7.60 சதவீதம் ஆகும். விபரம் வருமாறு.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 361.60 | 361.39 | 0.21 | 0.06 |
| மூலதனம் | 143,903.76 | 132,942.17 | 10,961.59 | 7.62 |
| மொத்தம் | 144,265.36 | 133,303.56 | 10,961.80 | 7.60 |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இல | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11701 | 9.00 | 8.82 | 3.60 | 6.08 | 40.00 | 26.97 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 132,297 ஆகும். விபரம் வருமாறு.

| அமைச்சு | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற் துறை அமைச்சு | 7002/0000/00/0332/0014 | 31,700 |
| | 7003/0000/00/0054/0014 | 100,597 |
| மொத்தம் | | 132,297 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 369.39 மில்லியன் ஆகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சினது ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் அவதானிப்புகளுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு

அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதியதும் முக்கியமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 117 - நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு

### 3.1 பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 அந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனிகள், துணைப் பாகங்கள் மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | பெறப்படுகின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 |
| (iv) | மின் உபகரணப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |
| (v) | இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (vi) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (vii) | வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| (viii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குதல்

மீளாய்வாண்டின்போது அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினா ஒன்றிற்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதில் சமர்ப்பிக்கப்படாததுடன், அந்த ஐயவினாவிற்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 8,332,466 ஆகும்.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

--------------------------------

**பாதீட்டு முரண்**

-----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்கத் திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் தேவையான கட்டுநிதி எல்லைகள் குறிப்பிடப்பட்டு திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த எல்லைகள் திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் எதிர்பார்க்கப்பட்டவாறு திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்தால் அமைச்சிற்குக் கட்டுநிதி வழங்கப்படாமையால் பின்வரும் செலவின விடயங்களுக்கென வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 3,365.57 மில்லியன் நிதிஏற்பாட்டை பயன்படுத்தப்பட முடியாது போயிருந்தது.

(அ) 06 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 308.60 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 05 செலவின விடயங்களுக்கு மிகையான நிதிஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 51 சதவீதம் 93 சதவீதமாக அமைந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அமைச்சானது நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 54 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 34,092.95 மில்லியன் பொறுப்பாக உருவாகியிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

--------------------------------------------------------------------------------

விடய இலக்கம் 11701, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள்

தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 1,693,198 ஆகும். அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 20 ஆண்டுகளானவையாயினும் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) மரணமடைந்த, ஓய்வுபெற்ற, ஏனைய அரச நிறுவனங்களுக்கு மாற்றலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 780,534 கூட்டுத்தொகை 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையாயினும் அமைச்சு அம்மீதிகளை அறவிடத்தவறியிருந்தது.

**3.5 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 115 | 104,832 | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது அங்கீகாரமின்றி முன்னைய ஆண்டிற்கான கொடுப்பனவுகள் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 139 | 159,208 | புதினப் பத்திரிகை விளம்பரங்களுக்கான ரூபா 159,208 செலவிற்குரிய 09 பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை | | |
| | (i) 2007 ஏப்ரல் 07 ஆந் திகதிய 33 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | முன்னுரிமைச் செயற்திட்டங்களான 1, 2, 3 என்பவற்றினது முகாமைத்துவக் கூறுக்கு 25 உத்தியோகத்தர்களும் செயற்திட்ட ஆலோசனைக் கூறுக்கு 81 உத்தியோகத்தர்களும் சுற்றறிக்கைப் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெறாது ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது. |
| | (ii) - மேற்படி - | 2,345,944 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெறாது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வீதி இணையதள அபிவிருத்திச் செயற்திட்டத்தால் ரூபா 2,345,944 விசேட படியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| | 2006 திசெம்பர் 26 ஆந் திகதிய PE/423 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | - | மீளாய்வாண்டிற்கான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த வரவு, செலவுத் திட்டம் 2013 செப்டம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் அரசாங்க கணக்குப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | | |
| | (i) வழிகாட்டல் 3.1 மற்றும் 3.2 | 119,266,514 | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுக்கு முரணாக ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு 11 உசாத்துணையாளர்கள் ஆரம்ப விசாரணை நடவடிக்கைகளுக்கெனச் சேவையில் இணைக்கப்பட்டு அவர்களுக்கு மொத்தமாக ரூபா 119,266,514 செயற்திட்டத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) வழிகாட்டல் 8.13.4 | - | தெற்குப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ‘‘நில்வலா கேட்’’ ஞாபகச் சின்ன நிர்மாண வேலைக்குத் தயாரிக்கப்பட்ட |

பலகையினது ஒப்பந்தப் பெறுமதி ரூபா 4,510,000 ஆகும். எனினும் ஒப்பந்தகாரர் நிறைவேற்றிய ரூபா 2,891,337 மேலதிக வேலைகளுக்கு முறையான அங்கீகாரம் பெறப்படவில்லை.

(உ) அமைச்சரவைத் தீர்மானம்

| | |
|---|---|
| 2005 ஒக்டோபர் 26 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் 4 ஆம் பந்தி | 2006 சனவரி 01 ஆந் திகதி முதல் பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றினது விற்பனைப் பெறுமதியில் முறையே ரூபா 1 மற்றும் 50 சதம் எனப் பெறப்பட்டு வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், இத் தீர்மானத்தை அமுல்படுத்துவதில் உள்ள வசதியின்மை காரணமாக வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் குறித்த இலக்கை அடைய முடியவில்லை. |

## 3.6 வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின்போது வெளிநாட்டு நிதியளிப்பின் மூலம் 29 செயற்திட்டங்களை அமைச்சு அமுலாக்கியிருந்தது. 2014 ஆம் ஆண்டினது ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கூட்டுத்தொகை ரூபா 122,257,809,460 ஆகும். அச் செயற்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின்போது ரூபா 113,342,363,419 பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ்வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்கள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு உதவியுடனான செயற்திட்டங்களது செயலாற்றல்

பின்வரும் செயற்திட்டங்களது செயற்திட்டங்களில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பேஸ்லைன் வீதிச் செயற்திட்டம் - III ஆம் கட்டம்

பேஸ்லைன் வீதிச் செயற்திட்டத்தினது III ஆம் கட்டத்தின் கீழ் கிருலப்பனையிலிருந்து கொழும்பு - ஹொரண வீதியில் துட்டகைமுனு முச்சந்தி வரையான புதிய வீதியின் ஆரும்பப் பணிகள் 2009 ஆம்

ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படவில்லை. இதன் பொருட்டு செலவாகிய ரூபா 423.43 மில்லியன் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

(ii) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - II ஆம் கட்டம்

-----------------------------------------------------------------------------------------------

குறித்த காலப்பகுதியின் போது ஒப்பந்தக்காரரது விலைப் பட்டியல்களுக்குப் பணம் செலுத்தப்படாமையின் காரணமாக ரூபா 142 மில்லியன் தாமத வட்டியாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - I ஆம் கட்டம்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- குறித்த காலப்பகுதியின்போது ஒப்பந்தகாரரது விலைப் பட்டியல்களுக்குப் பணம் செலுத்தப்படாமையால் ரூபா 29.16 மில்லியன் தண்டப் பணமாகவும் வட்டியாகவும் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

- பரந்தன் முல்லைத் தீவு வீதியில் குறித்த மாதிரிகளுக்கமைய வீதியின் தளத்தில் தார்க் கலவையைப் பதிப்பதற்கு (Asphalt Concrete) நடவடிக்கை எடுக்காமையால் செயற்திட்டம் ரூபா 35,508,531 கொடுப்பனவை மேற்கொள்ளாது அதனை நிறுத்தி வைத்திருந்தது.

(iv) சவூதி நிதிய வீதி இணையதள அபிவிருத்திச் செயற்திட்டம்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பின்வரும் வீதி நிர்மாண வேலைகள் எதிர்பார்த்த இலக்கை அடையாதிருந்தன. விபரம் வருமாறு.

| வீதி | எதிர்பார்த்த முன்னேற்றத்தின் சதவீதம் | பௌதீக முன்னேற்றத்தின் சதவீதம் |
|---|---|---|
| - தம்பலாகாமம் தொடக்கம் கிண்ணியா வரையிலான வீதியில் தம்பலகாமத்திலிருந்து சூரங்கல் சந்தி வரையான பகுதி | 100.00 | 82.50 |
| - தெஹிஓவிட்ட - தெரணியகல நூரி வீதி | 75.49 | 43.57 |
| - கண்டி - யாழ்பாணம் வீதியில் பலாபத்வல தொடக்கம் நாஉல வரையிலான பகுதி | 85.83 | 22.37 |

- தெஹிஓவிட்ட - தெரணியாகல வீதி நிர்மாணவேலை சம்பந்தமாக முறையான பொறியியல் ஆய்வினையடுத்து பிரமாணங்களின் அளவுப்பத்திர பட்டியல் தயாரிக்காமையால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்தக்கிரயம் ரூபா 154,696,303 அதிகரிப்புக்குள்ளாகியது.

(v) ஹெட்டன் - நுவரெலியா வீதி அபிவிருத்திச் செயற்திட்டம்

லிந்துல சந்தியிலிருந்து ஏறக்குறைய 200 மீட்டர் டயகம வீதியில் வீதித்தளத்தில் தார்க் கலவை (Asphalt Concrete) பதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. இதன் பொருட்டு மேலதிகமாக ரூபா 2,828,200 செலவிடப்பட்டபோதும், அது செயற்திட்டத்தின் பரப்பெல்லைக்கு உட்பட்டதாக இருக்கவில்லை.

(vi) தேசிய வீதிப் பிரிவுச் செயற்திட்டம்

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மாத்தறை - கொடகம வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகளது பரப்பெல்லை மாற்றம் அடைந்தமையால் மாத்தறை ராகுல வித்தியாலயத்தின் மதிற்சுவரை நிர்மாணிப்பதற்கு ரூபா 14 மில்லியன் தொகையும் வடிகாலமைப்பு முறைமையினை மீண்டும்

ஸ்தாபிப்பதற்கு ரூபா 25 மில்லியன் என மேலதிகச் செலவினம் ஏற்பட்டிருந்தது.

- ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம் ஒப்பந்த உசாத்துணையாளருக்கு வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதும், தேசிய வீதிப் பிரிவுச் செயற்திட்ட ஒப்பந்தகாரரால் ரூபா 4,640,023 பெறுமதியுடைய முதல்தர வீடு ஒப்பந்த உடன்படிக்கைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதற்கெனக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையில் ரூபா 2,320,012 பதின்மூன்றாம் இலக்க இடைக்காலக் கொடுப்பனவு அறிக்கை மூலம் அறவிடப்பட்டிருந்தது.

(vii) வீதிப் பிரிவு உதவிச் செயற்திட்டம்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தின் போது வீதி நிர்மாண வேலை நடவடிக்கைகள் தொடர்பான ஆக்கபூர்வ விசாரணைகள் மேற்கொள்ளப்படாததுடன் செயற்திட்டத்தின் கிரயம் முறைப்படி மதிப்பீடு செய்யப்படவுமில்லை. இதன் காரணமாக 04 வீதிகளது கிரயத்தில் 12.6 முதல் 18.3 சதவீதம் வரையிலான முரண்களின் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தன. இதனால் முரண்களுக்கான கட்டளைப் பிரகாரம் ரூபா 603.82 மில்லியன் கூட்டுத்தொகையான முரண்களைக் கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

- ஹிக்கடுவை தொடக்கம் தெற்கு அதிவேகமான பாதை வரை வீதியமைத்தல் ஒப்பந்தத்திற்கு தொடர்பில்லாத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக்குச் சொந்தமான வடிகாலமைப்பு முறைமையை மீண்டும் நிறுவுவதற்கு ரூபா 78.8 மில்லியன் செயற்திட்டத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அதற்குப் புறம்பாக, நிறைவேற்று பொறியியலாளருக்கு அலுவலகக் கட்டிடம் அமைத்தல், ஹிக்கடுவை மற்றும் கோனாபீனுவல அஞ்சலகங்களின் பாதுகாப்புச் சுவர்களை அமைத்தல் என்பவற்றிக்கும் ரூபா 5.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- உள்ளூர் ஆலோசகர்களை நியமிக்கும் கடிதத்தின் பிரகாரம், அவ்வுத்தியோகத்தர்களுக்கு அவர்களது சம்பளத்தைத் தவிர வேறுபடிகளுக்கு உரித்தில்லாத போதும், அவ்வுத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படி மற்றும் பயணச் செலவினம் என முறையே ரூபா 2,880,000 ரூபா 1,148,792 என்பன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

- மாத்தறை தொடக்கம் கொடகம வரையான வீதியில் பிரமாணக் குறிப்பு (BOQ) 8.2.2 பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட பின்கர்ப்பினது அளவானது மீளாய்வாண்டு முடிவில் பயன்படுத்தப்பட்டிருந்த பின்கர்ப்பின் அளவுடன் ஒப்பிடப்படுகையில் 6,272 மீட்டர் நீள பின்கர்ப எஞ்சியிருந்தது. அவ்வாறிருக்க 2,198.6 மீட்டர் பின்கர்ப் ரூபா 5,496,500 பெறுமதியில் முரண்பட்டு கட்டளை இரண்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(viii) வடக்கு அதிவேக வீதிச் செயற்திட்டம்

-----------------------------------------------------------

மேற்குறிப்பிட்ட வீதியின் 03 ஆம் கட்ட நிர்மாண வேலை தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுகள் (Feasibility Study) தனியார் கம்பனி ஒன்றிடம் ரூபா 986,380,104 பெறுமதியில் ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, என்டேரமுல்ல தொடக்கம் மீரிகம வரை முதல் கட்டமும் மீரிகமவிலிருந்து குருநாகல்வரை இரண்டாம் கட்டமும், குருநாகலிருந்து கண்டி வரை மூன்றாம் கட்டமும் இனங் காணப்பட்டு சாத்தியக்கூறு ஆய்வுகள் நடைபெற்றிருந்தன. இக் கட்டங்கள் பின்பு மாற்றமடைந்து மீளாய்வாண்டு முடிவில் என்டேரமுல்ல தொடக்கம் கம்பஹா வரையான சாத்தியக்கூறு ஆய்வு நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரால் நிறைவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பின்னர் செயற்திட்டத்தின் சட்டங்கள் கடவத்தை தொடக்கம் கம்பஹா வரை என மீளாய்வு செய்யப்பட்டதால் என்டேரமுல்ல முதல் கம்பஹா வரையிலான சாத்தியக்கூறு ஆய்விற்கான செலவினம் பயனற்றதாகியது.

(ix) ஒபெக் நிதிய வீதி இணையதளச் செயற்திட்டம்

--------------------------------------------------------------------------

ஒப்பந்த உடன்படிக்கையின் 14.8 (General Condition) பந்தியின் பிரகாரம் குறித்த தினத்தில் விலைப்பட்டியலுக்குரிய பணம் வழங்ப்படாமையால் ஒபெக் நிதிய வீதி இணையத்தளச்

செயற்திட்டத்தின் கீழ் தண்டப்பணமாகவும் வட்டியாகவும் ரூபா 1,585,810 செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) செயற்திட்டச் சொத்துக்கள் குறைவாக பயன்படுத்தப்படுதல்/பயனற்றிருத்தல்

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னுரிமை வீதிச் செயற்திடடம் - II ஆம் கட்ட நடவடிக்கைகள் 2014 ஜுன் 28 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2014 ஜுன் 11 ஆந் திகதி ரூபா 2,708,184 செலவில் பூகற்வியல் தகவல் மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் முடிவடையும் தறுவாயில் இவ்வாறான கொள்வனவுக்கான தேவையைக் கணக்காய்வில் உணர முடியாதிருந்தது.

(ii) வீதிப்பிரிவு உதவிச் செயற்திட்டத்தில் வடிகாலமைப்பு நடவடிக்கைகளுக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 84 மில்லியன் பெறுமதியான நீர்க்குழாய் உபகரணங்கள் 2 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாது செயற்திட்ட வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) பிரதேச பாலச் செயற்திட்டத்தின் கீழ் குளியாப்பிட்டி அலபலாதெனியா வீதியில் ரூபா 70,190,859 பெறுமதியான பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஏப்ரல் 08 ஆந் திகதியன்றும் 2010 ஆகஸ்ட் 16 ஆந் திகதியன்றும் குளியாப்பிட்டிய நிறைவேற்று பொறியியயளாளரிடம் வழங்கப்பட்டிருந்தது. 5 ஆண்டு கடந்தும் அந் நிர்மாண வேலை முடிவடையாதிருந்தது. இதன் காரணமாக, இவ்விடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த பாலத்தின் உதிரிப்பாகங்கள் பயனற்றிருந்தது.

(iv) கொட்டகல சுரங்க வீதிக்கென ரூபா 2,113,008 பெறுமதியுடைய நான்கு ''லெட்டிஸ் ஆர்ச்சஸ்'' (Lattice Arches) கூடுதலாகத் தயாரிக்கப்பட்டு அவை பயன்படுத்தப்படாது நோர்வுட்டில் உள்ள நிறைவேற்று பொறியியலாளர் அலுவலக வளாகத்தில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தை குறித்த தினத்தில் ஆரம்பிக்காமை

--------------------------------------------------------------------------------

பாமன்கடை – கெஸ்பேவை வீதிக்கான ஒப்பந்த உடன்படிக்கை 2012 ஒக்டோபர் 01 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட போதும், 6 மாத தாமதத்தின் பின்னர் 2013 மார்ச் 25 ஆந் திகதியன்று முதலாம் கட்ட புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கென வீதி ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், இரண்டாவது கட்டத்திற்கான வீதி 2014 மே 20 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, இவ்வீதிக்கான அளவைப் பத்திரத்தின் பெறுமதி ரூபா 30.36 மில்லியன் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. இவ்வீதியை புனர்நிர்மாணஞ் செய்வதற்கான காணியைச் சுவீகரிக்கும் பணிகளில் தாமதம் மற்றும் மின்சாரம், நீர் போன்றன தாமதத்திற்கு காரணமாக அமைந்தன. செயற்திட்டப் பொறியியலாளரின் மதிப்பீட்டிற்கமைய ஆரம்ப நடவடிக்கைகள் மற்றும் சாதாரண நடவடிக்கைகள் என்பவற்றிக்கான மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 145.33 மில்லியனெனினும், ஒப்பந்தக்காரர் கோரிய தொகை ரூபா 256 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், கொடுப்பனவு வீதங்களைப் பகுப்பாய்வு செய்யாது ஒப்பந்தக்காரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தது.

## 3.7 செயலாற்றல்

---------------------

2014 இன் வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) மகநெகும செயற்திட்டம்

--------------------------------------

மகநெகும செயற்திட்டம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அம்பாந்தோட்டை மாவட்டம்

---------------------------------------------

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள அங்குனகொலபெலெஸ்ஸ, கட்டுவன, திஸ்ஸமஹாராம ஆகிய பிரதேச சபைக்களுக்குள் அடங்கும் கிராமிய வீதிகளது உள்ளக இணைப்பு கொங்ரீட் கற்களைப் பதிப்பது தொடர்பான கணக்காய்வுப் பரீசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச சபை

---------------------------------------------------------------------

கோவைகளைப் பரிசோதித்த போதும் செயற்திட்டங்களது நேரடிப் பரிசோதனையின் போதும் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2013 மே 03 ஆந் திகதிய 2013/2 ஆம் இலக்க மகநெகுகம சுற்றறிக்கைப் பிரகாரம் பரிசோதனைக்குச் சமர்ப்பிக்கக் கூடியதாக முறைப்படி கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

- அங்குனகொலபெலெஸ்ஸ இந்திகெட்டவல மயானத்திற்குச் செல்லும் வீதியின் I ஆம் கட்ட வேலைகளுக்கு ரூபா 500,000 செலவில் கொங்ரீட் கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றிருந்த போதும், அவ்விடத்தில் மயானத்திற்கான இடம் ஒதுக்கப்பட்டது. மாத்திரமே நடைபெற்றிருந்தது. அவ்வீதியைப் பயன்படுத்தும் குடியிருப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) கட்டுவன பிரதேச சபை

---------------------------------------

நேரடிப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- வேலை இடம்பெறாத 2 வீதிகளுக்கு ரூபா 20,079 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
- வீதியைத் தயாரிக்கும் போது நலன்பெறுநர்களது எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளாது 2 அல்லது 3 நலன்பெறுநர்களுக்கெனவே வீதி தயாரிக்கப்பட்டிருந்தது.

- நிர்மாண வேலை நிரந்தர மேற்பார்வைக்கு உள்ளாகின்றமையை உறுதி செய்வதன் பொருட்டு எந்தவொரு வீதிக்கோ அல்லது வீதி வகுப்பிற்கோ சம்பவப் பதிவேடுகள் பேணப்படவில்லலை.

- வீதியை நேரடியாகப் பரிசோதித்த போது, வீதியின் இரு மருங்கிலும் மண் நிரப்பப்பட்டு தயாரிக்கப்படாதிருந்தமை, வீதியின் இரு மருங்கிலும் உள்ள கொங்ரீட் பக்கச் சவர்கள் வெடிப்புக்குள்ளாகி இருந்தமை, வீதிக்களுக்கிடையே உள்ள கொங்ரீட் சுவர் வெடிப்புக்குள்ளாகியமை விதி கீழிறங்கியிருந்தமை, இரு பக்கக் கழிவு நீர்ப்பாதையும் தயாரிக்கப்படாமை, இணைப்பு வீதிகளது பராமரிப்பு நடவடிக்கைகள் நடைபெறாமை போன்ற குறைபாடுகள் நிலவின.

- கட்டுவன பிரதேச சபைக்குட்பட்ட இடத்தில் கொங்ரீட் கற்களைப் பதித்திருந்த வீதி நேரடிப் பரிசோதனைக்குள்ளான போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

    - தேசிய அல்லது மாகாண ரீதியிலான வீதியுடன் தொடர்புபடாத வீதியைத் தெரிவு செய்தமை, கொங்ரீட் கற்களைப் பதிப்பதற்கு முன் வீதியை முறையாகச் செப்பனிடாமை, கொங்ரீட் கற்களுக்கிடையே கற்தூள் அல்லது மணலைப் பரவாதிருந்தமை. வீதியின் மேற்பரப்பு ஆங்காங்கே கீழிறங்கியிருந்தமை , வீதியின் இரு மருங்கிலும் கொங்ரீட் சுவர்களுக்கும் கற்கள் பரவப்பட்டுள்ள இடங்களுக்கிடைய இடைவெளி இருந்தமை என்பன காணப்பட்டன.

(iv) திஸ்ஸமஹாராம பிரதேச சபை

--------------------------------------------------

கோவைகளைப் பரீசீலித்த போதும் நேரடிப் பரிசோதனையின் போதும் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ஒப்பந்தக்காரருடனான உடன்படிக்கையின் பிரகாரம், ஏறக்குறைய ரூபா 500,000 பெறுமதியான நிர்மாண வேலைகளுக்கு 06 மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, நிர்மாண வேலை நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன.

- வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது நலன்பெறுநர்களின் எண்ணிக்கைளைக் கவனத்திற்

கொள்ளாது 02 அல்லது 03 நலனாளிகள் மாத்திரம் வசிக்கும் வீதியைத் தெரிவு செய்து அதனை அபிவிருத்தி செய்தல்

- நேரடிப் பரிசோதனையின் போது வீதியைச் சரிவரச் செப்பனிபட்டுக் கொங்ரீட் கற்களைப் பதிக்காது போனமையால் வீதியின் மேற்தளம் சமமாக அமையாததும் இணைப்பு வீதிகள் இல்லாத இடங்களை தெரிவு செய்திருந்தமையும் வீதியின் கொங்ரீட் இடப்பட்ட இடங்களில் கீறல்கள் ஏற்பட்டிருந்தமையும் போன்ற குறைபாடுகள் நிலவின. மேலும், முறைப்படி மட்டப்படுத்தப்பட்டு மேற்பரப்பு தயாரிக்கப்படாமையால் வீதி ஆங்காங்கே கீழ்ழிறங்கியிருந்தது.

- வீதியில் கற்களைப் பதித்ததன் பின்னர் அதனை மட்டுப்படுத்துவதற்கு மணல் பரவி அதனைத் தயாரிப்பதற்கெனத் ரூபா 60,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், நேரடிப் பரிசோதனையின் போது வீதியின் மேற்பரப்பில் போதியளவு மணல் பரவப்படாத சந்தர்ப்பங்கள் நிலவின.

- திஸ்ஸமஹாராம அந்தரகஸ்யாய முன்பள்ளிக்கருகே உள்ள வீதியின் 70 ஆம் மீற்றர் எல்லைப் பிரிவில் சில இடங்களில் கற்கள் மேலே உயர்ந்திருந்ததுடன் அவ்வீதியின் மூலையில் உள்ள ஒரு பகுதியில் கற்கள் முறையற்றவாறு பரவப்பட்டிருந்தன. வீதித் தளத்தை மட்டப்படுத்துவதற்கு ரூபா 23,011 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- மாகம அக்கரவிஸ்ஸ வீதியின் (I ஆம் கட்ட வீதியில்) இறுதிப் பகுதியில் கற்கள் விலகியிருந்தது. வீதி மேற்பரப்பில் இயந்திரங்கள் மூலம் மட்டுப்படுத்தி இறுக்கமடையச் செய்வதற்கென ரூபா 23,011 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) குருநாகல் மாவட்டம்

---------------------------------------

மஹவ நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு, குருநாகல் பிரதேச சபை மற்றும் அளவ்வை பிரதேச சபை என்பவற்றில் மகநெகும செயல்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமிய வீதிகள்

சம்பந்தமான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மஹவ நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், உங்கல, சியம்பலன்கமுவ தியவர கிராமத்தில் 47 ஆம் 45 ஆம் வீதிப்பிரிவில் அமைக்கப்பட்ட வீதிகளின் தூரத்தை அளவிட்ட போது குறித்த அளவைப் பத்திரங்களின் பிரகாரம் இருக்க வேண்டிய தூரத்தை விடக் குறைவாக நேரடிப் பரிசோதனையில் தெரிய வந்ததால் கொடுப்பனவு செய்ய வேண்டிய தூரத்திற்குரிய தொகை ரூபா 493.024 கூடுதலாக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

- நாற்பத்து இரண்டாம் கட்ட வீதியின் இரு மருங்கிலும் மண்ணை நிரப்பி வீதியைச் சரிவர, செப்பனிடாததுடன் அதற்கென ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 162,987 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

- நாற்பத்து எட்டாம் கட்ட நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது 2007 பெப்ரவரி 26 ஆந் திகதிய 2007/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிகளது அபிவிருத்திக்கான தெரிவின் போது தேசிய மற்றும் மாகாண ரீதியிலான வீதியுடன் தொடர்புபடும் வீதிகள் மாத்திரமே தெரிவு செய்யப்பட வேண்டிய போதும், அதனைக் கருத்திற் கொள்ளாது, தனிநபர் ஒருவரது வீட்டிற்குச் செல்லும் சியம்பலன்கமுவ தியவர கிராமத்தின் 48 ஆம் வீதி நிர்மாணிக்கப்பட்டமையால் அதற்கெனச் செலவிடப்பட்ட ரூபா 963,812 முறையான பொருளாதார நலன் பெறப்படவில்லை.

- பிரதேச சபையால் 1 சதுர மீட்டர்களுக்குக் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்வதற்கென ரூபா 2,536 செலவிடப்பட்டிருந்த போதும், வீதி அபிவிரத்தி அதிகார சபையால் அவ் வேலைக்கு ரூபா 4,048 செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, உஸ்ஸல சியம்பலன்கமுவ வீதியில் 3,963.3 சதுர மீட்டர் வீதியை அபிவிருத்தி செய்வதற்குப் பிரதேச சபை செலவழித்த தொகையை விட ரூபா 6,707,770 கூடுதலாகச் செலவிடப்பட்டிருந்தது.

(vi) குருநாகல் பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம்

------------------------------------------------------------------------------------------------

நிர்மாண வேலைகள் நேரடியாகப் பரிசோதிக்கப்பட்ட போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- வீதித் தயாரிப்பிற்கான அளவைப் பத்திரங்களின் பிரகாரம் வீதியின் இருமருங்கிலும் கொங்ரீட் சுவர்களது உயரம் 8.3 அங்குலம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், நேரடிப் பரிசோதனைக்குள்ளான வீதிகளின் உயரம் 8 முதல் அங்குலம் முதல் 5 அங்குலம் வரையான வீச்சில் இருபக்கச் சுவர்களது உயரம் 6 அங்குலமாகவும் இருந்ததுடன் 3 வீதிகளது இருபக்கச் சுவர்களதும் உயரம் 7 அங்குலமாக இருந்தன. இதன் காரணமாக, வீதியின் பாதுகாப்பு தொடர்பாகத் திருப்தியடைய முடியாதிருந்தது.

- வீதியில் அபிவிருத்தி செய்யப்படக் கூடிய பகுதியைச் சரிவர இனங்காணாமை, மாகாண ரீதியிலான அல்லது தேசிய வீதியுடன் தொடர்புபடும் வீதிகளைத் தெரிவு செய்யாமை, வீதியின் மேற்பரப்பில் கிரவல் இட்டு பரவித் தயார் செய்யாமையை, வீதியின் சில இடங்களில் கற்கள் கீழே இறங்கியிருந்தமை போன்ற குறைபாடுகள் நிலவின.

## 3.8 வங்கிக் கணக்கு

-------------------------

அமைச்சிற்குரிய வங்கி நடைமுறைக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த, காலங் கடந்த ரூபா 120,229 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 18 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாந் தர நிலை | 606 | 354 | 252 |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 24 | 08 |
| | மொத்தம் | 669 | 399 | 270 |